# சங்ககாலம்







சங்ககாலம் என்பது கி.பி 1-3 நூற்றாண்டு வரையான காலப்பகுதியை உள்ளடக்கியது. இது இயற்கை நெறி காலம் என்பர்.

# சங்ககால இலக்கிய பண்புகள்.


1. அகம்,புறம் என்ற பொருள் மரபுபிற்குள் அடங்கும் பாடல்கள்.
2. இயற்கையோடு ஒட்டியவை.
3. முதல், கரு, உரிப்பயன்பாடு.
4. அன்பின்ஐந்திணை,கைக்கிளை,பெருந்திணை,ஐந்திணை போரொழுக்கம்,காஞ்சிதிணை,பாடாண்திணை என்பவற்றின் வெளிப்பாடு.
5. உள்ளதை உள்ளபடியே கூறல்
6. இயற்கை உவமைகள், இயற்கைவர்ணணைகள் கையாளப்பட்டமை.
7. அளவான வர்ணணைகளின் வெளிப்பாடு.
8. உள்ளுறை உவமம், இறைச்சிபொருள் பயன்பாடு.
9. தனிநிலை செய்யுள்களின் பயன்பாடு.
10. அகவல்,வஞ்சி போன்ற பாவகைகளின் பயன்பாடு.
11. பெருமளவில் தூயதமிழ் பயன்பாடு.

# சங்கால இலக்கிய பண்புகள்

# பொருள் மரபு

# செய்யுள் மரபு





# பொருள் மரபு

அகத்திணை பண்புகள்

புறத்திணை பண்புகள்





# சங்ககால அகத்திணை பண்புகள்

1. காதல் பாடல்கள் காணப்படல். "காமம் சாலா இளமை யோள்வயின் ஏமம் சாலா இடும்பை எய்தி.."
2. ஒருவரின் பெயர் சுட்டி பாடப்படாமை. "இளமை பாரார் வளநசையி சென்றோர்.."
3. முதல்,கரு,உரி என்பவற்றின் பயன்பாடு. "படுமழை பொழிந்த பயமிகு புறவின்.." என்ற பாடலில்,
4. முதல் - நிலம் - முல்லை
   பொழுது – கார்காலம்
   கரு - தேரை,பிடவம்செடி,காந்தள்மலர்,மான்..
   உரி - இருத்தலும் நிமித்தமும

5. அன்பின்ஐந்திணை வெளிப்பாடு.
(குறஞ்சி,முல்லை,மருதம்,நெய்தல்,பாலை)

6. கைக்கிளை " குறிஞ்சித் திணையில் மருதனிளநாகனார் பாடிய நற்றிணையில்.." "சொல்லின் சொல் எதிர் கொள்ளாய்.." பெருந்திணை " நில்லா உலகம் புல்லிய நெறித்தே" போன்றவற்றின் வெளிப்பாடு.

7. சிறப்பான அணி பயன்பாடு
உள்ளுறை உவமம்- "புனவன் துடவை.."
இறைச்சிப்பொருள்- "கன்றுதன் பயமுலை மாந்த.." போன்றவற்றின் வெளிப்பாடு.

8. பாத்திர கூற்றுகளாக பாடல்கள் உள்ளமை.
(தலைவன்,தலைவி,தோழி,பாங்கன்,நற்றாய், செவிலித்தாய் முதலிய பாத்திர கூற்றாக அகப்பாடல்கள்அமைந்துள்ளன.)

9. இயற்கை வர்ணணைகள் காணப்படல்.




10. புலநெறிவழக்கு,நாடகவழக்கு, உலகியல்வழக்கையும் ஆதாரமாக கொண்டு எழுந்தமை.

11. பெரும்பாலும் அகவற்பாவினால் பாடப்பாபட்டுள்ளது.



12. சுருங்கிய சொல்லில் விரிந்த பொருளை உணர்த்தும

# சங்ககால புறத்திணை பண்புகள்

1. போர் பற்றிய செய்திகளை தருவது-(வெட்சி,வஞ்சி,உழிஞை,தும்பை,வாகை என்பவற்றை உள்ளடக்கிய ஐந்திணை மரபின் வெளிப்பாடு.)
2. நிலையாமை கருத்துகளை வெளிப்படுத்துகிறது. பதிற்றுபத்து பாடல் "பத்து பாட்டாதி மனம் பற்றிளார் பற்றுவரோ.."
3. மன்னர்களது கொடை,புகழ்,வீரம் என்பவற்றை பாடுவதும், தெய்வங்களையும் சமயங்களையும்
4. பாடுவதும், இயற்கை கற்பனையை பாடுவதும், மக்களது சமூக,பொருளாதார வாழ்வு பற்றிய தகவல்களை பேசுவதும்,கலையம்சம் தொடர்பான தகவல்களையும் புறத்திணை பாடல்கள் தருகின்றன.
5. பாடாண்திணை வெளிப்பாடு. "பதிற்றுபத்தில்... குடவர் கோவே கொடித்தேர் அண்ணல் வரார்"
6. பெயர் சூட்டும் பாடல்கள் "வேம்புதலை யாத்த நோன்காழ் எஃகமொடு முன்னோன் முறை காட்ட..."

7. மன்னரது வள்ளல்களை புகழ் பாட அவர்களை நோக்கி வறியவர்களை வழிப்படுத்தும் ஆற்றுபடை நூல்களை இயற்றியமை.

- திருமுருகாற்றுப்படை
- பொருநராற்றுப்படை
- சிறுபாணாற்றுப்படை
- பெரும்பாணாற்றுப்படை
- மலைப்படுகடாம்



8. பெருபான்மை பாடல்கள் புலவர் பாடல்களாகவும் சில பாடல்கள் விறலி,பாணர் பாடல்களாக காணப்படுகின்றன. ("அத்தம் செல்வோர் அறைத் தாக்கிக் கைப்பொருள்..")

9. அறிவுரை கூறும் பாடல்களாக காணப்பட்டன. ("யாதும் ஊரே யாவரும் கேளீர்...")

10. பாடல்கள் முடிவில் துறை,வண்ணம்,இசை,பெயர் என்பவற்றை புலப்படுத்தும் குறிப்புகள் காணப்படல்.(உதாரணம் - பதிற்றுபத்து பாடல்கள்)

11. உள்ளதை உள்ளவாறு கூறுதல்,நேரில் காண்பதை போல பாடல்கள் காணப்படுதல்.

# செய்யுள் மரபு

- தனி நிலை செய்யுள்களாக காணப்பட்டன.
- அகவற்பா பெருமளவில் கையாளப்பட்டுள்ளது.
- வஞ்சிப்பா,கலிப்பா,பரிபாட்டு முதலான பாவகைகளும் பயன்படுத்தப்பட்டன.
- சிறிய சொற்கள் செய்யுளில் பயன்படுத்தப்பட்டன.
- அகச்செய்யுள்கள் பாத்திர கூற்றாக அமைந்துள்ளன.
- புறச்செய்யுள் புலவர் கூற்றாக அமைந்துள்ளன.
- சங்கஅகசெய்யுள் நாடக தன்மை கொண்டவையாக காணப்படல்.
- உள்ளதை உள்ளவாறே கூறுபவையாக செய்யுள்கள் அமைந்தன.
- தூய தமிழ் மொழி நடை.

# சங்ககாலம் தொடர்பான மாதிரி வினாக்கள்.

- சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் அடையாளம் இடுக.

1. சங்ககாலத்தை அறநெறி காலம் என அழைப்பர். (     )
2. சங்ககாலத்தில் பக்தி நூல்கள் அதிகமாக காணப்பட்டன. (     )
3. சங்ககாலத்தில் இயற்கை வழிபாடு காணப்பட்டது. (     )
4. சங்ககாலத்தில் அகவற்பா அகத்திணை பண்புகளை வெளிபடுத்த உதவியது. (     )
5. சங்ககாலத்தில் கைக்கிளை,பெருந்திணை மரபு காணப்படவில்லை. (     )
6. சங்ககால முதற்சங்கத்தில் அகத்தியரும் ஒருவராவார். (     )
7. சங்ககால பாண்டிய பேரரசின் இலட்சினை மீன் ஆகும். (     )
8. பதிற்றுபத்து அகபுற நூல்களில் ஒன்றாகும். (     )
9. சங்ககால மக்களுக்கும் மன்னர்களுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு காணப்பட்டது. (     )
10. தொல்காப்பியம் சங்ககால நூல்களில் ஒன்றாகும். (     )

## ❑ குறுா வினாக்களுக்கு விடை தருக.

1. சங்ககால புலவர்களின் பெயர்கள் நான்கு தருக.
2. சங்ககாலத்தில் காணப்பட்ட களவொழுக்கம்,கற்பொழுக்கம் பற்றி விபரிக்குக.
3. சங்ககாலத்தில் காணப்பட்ட அகத்திணை,புறத்திணை ஒழுக்கங்கள் எவை?
4. சங்ககால ஆற்றுப்படை நூல்கள் ஐந்து தருக.
5. சங்ககால குறுநில மன்னர்கள் நால்வரை பெயரிடுக.
6. அகநானூறு என்ற நூலின் வேறு பெயர் யாது?
7. சங்ககாலத்தின் கால வரையறை யாது?
8. நெடுநல்வாடை எவ் நூற்தொகுதிக்குள் உள்ளடங்கும்?
9. சங்ககாலம் வீழ்ச்சி அடைந்தமைக்கான காரணங்கள் இரண்டு தருக.
10. சங்ககாலத்தில் பதிகமுறையில் அமைந்த நூலொன்றின் பெயரை தருக.

# ❑ கட்டுரை வினாக்கள்.

- மன்னர்களை புகழ்ந்துபாடும் சங்க இலக்கிய மரபு பிற்காலத்தில் எவ்வாறு வளர்ந்துள்ளது என்பதைச் சுருக்கமாக கூறுக. (2006)
- சங்ககால இலக்கியங்களை அவற்றின் பொருள் மரபுக்கேற்பவும் செய்யுள் மருபுக்கேற்பவும் வகுத்துக்காட்டுக. (2007)
- ஆற்றுப்படை இலக்கியத்தின் அமைப்பினையும் சங்ககாலத்தில் அது பெற்ற வளர்ச்சியினையும் விளக்குக. (2007)
- சங்ககால அகத்திணை இலக்கியங்களின் தனித்துவ பண்புகளை விளக்குக. (2008)
- அவற்றுள் எவ்வெவ் பண்புகள் பல்லவர்காலப் பக்தியிலக்கியங்களிலே காணப்படுகின்றன என்பதை எடுத்துக்காட்டுக (2009)
- சங்ககால இலக்கியங்களின் தனித்துவபண்புகள் நான்கினை ஏற்ற எடுத்துக்காட்டுகள் தந்து விளக்குக. (2010)

- நெடுநல்வாடையை புறத்திணை இலக்கியமெனக் கொள்வது எவ்வாறு பொருந்து மென்பதைப் பரிசீலிக்குக. (2011)
- சங்ககால அகத்திணை நூல்களைக் குறிப்பிட்டு அகத்திணை மரபின் முக்கிய அம்சங்களை விளக்குக. (2012)
- உள்ளுறை உவமம் என்றால் என்ன என்பதைத் தெளிவுப்படுத்தி அகத்திணைப் பாடல்களில் உள்ளுறை உவமம் பயன்படுத்தப்படு மாற்றினை விளக்குக. (2012)
- சங்ககாலத்தில் எழுந்த ஆற்றுப்படை நூல்களை குறிப்பிட்டு ஆற்றுப்படைபற்றிச் சுருக்கமாக விளக்குக. (2013)
- அகத்திணைப் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு முதற் பொருள் கருப்பொருள் உரிப்பொருள் என்பவற்றைத் தெளிவுப்படுத்துக. (2013)
- சங்க இலக்கியங்கள் அகம் புறம் எனப் பகுக்கப்பட்டமைக்கான அடிப்படையினை ஆராய்க. (2014)
- கைக்கிளை பெருந்திணை பாடாண்திணை காஞ்சித்திணை என்பவற்றை விளக்குக. (2014)

# பல்தேர்வு வினாக்கள்

01. சங்காலத்தில் காதல் ஒழுக்கத்தை வெளிப்படுத்த பயன்பட்ட யாப்பு வகை ?

- அகவற்பா
- கலித்துறை
- பரிபா
- விருத்தப்பா

02. சங்காலத்தில் வீரம் ஒழுக்கத்தை வெளிப்படுத்த பயன்பட்ட யாப்பு வகை ?

- வஞ்சிப்பா
- அகவற்பா
- கலித்துறை
- வெண்பா

03. சங்காலத்தில் முதலில் அடங்க கூடிய கூறுகளாவன.

- இயற்கை
- நிலம்,பொழுது
- நிலம்
- பொழுது

04. கரு என்பது

- நிலம்
- பொழுது
- இயுற்கை
- ஒழுக்கம்

05. உரி என்புது

- ஒழுக்கம்
- பொழுது
- நிலம்
- இயற்கை

06. சங்ககாலத்தில் பாடல்களானது முடிவடையும் எழுத்து

- ஏகாரம்
- ஓகாரம்
- ஈகாரம்
- ஆகாரம்

07. ஐந்து நிலங்களுக்குமறிய அக ஒழுக்கம்

- ஐவகைஒழுக்கம்
- ஆன்பின் ஐந்திணை
- அகஒழுக்கம்
- காதல்ஒழுக்கம்

08. இக்காலத்தை இயற்கைநெறிக்காலம் எனக்கூறியவர்

- ஆ.வேலுப்பிள்ளை
- மு.வரதராசன்
- வி.செல்வநாயகம்
- கா.சிவதம்பி

09. பெயர்சுட்டும் பண்பு அமையப்பெறுவது

- அகம்
- புறம்
- அகமும்புறமும்
- பொது

10.பெயர் சுட்டா பண்பு அமையப்பெறுவது

- அகம்
- புறம்
- அகமும்புறமும்
- பொது